# எண்ணும் எழுத்தும் – முதல் பருவம் – 2023–24

## மாதத் தேர்வு (ஜூலை)

வகுப்பு – 5 | அறிவியல் | நேரம் : 45 நிமி

பெயர் : | மதிப்பெண் :15

---

**பத்தியைப் படித்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

மனித உடலில் உள்ள அனைத்து உறுப்பு மண்டலங்களும் நான்தான் சிறந்தவன் என்று சண்டையிட்டுக் கொண்டன. சுவாச மண்டலம் நான்தான் மூச்சை உள்ளே இழுக்கவும் வெளியேற்றவும் உதவுகிறேன் என்று கர்வத்துடன் கூறியது. உடனே செரிமான மண்டலம் நான்தான் உணவு செரிக்க உதவி செய்கிறேன், நானே சிறந்தவன் என்றது. உடலில் உள்ள அனைத்து பாகங்களுக்கும் இரத்தத்தை அனுப்புவதால் நானே சிறந்தவன் என இரத்த ஓட்ட மண்டலம் சண்டையில் சேர்ந்து கொண்டது. இரத்தத்தை சுத்திகரித்து கழிவுகளை வெளியேற்றுவதால் நானே சிறந்தவன் என்று கழிவுநீக்க மண்டலம் கூறியது. இவைகள் அனைத்தும் கட்டளை மையத்திடம் சென்று முறையிட்டன. அதற்கு கட்டளை மையம் அனைத்து உறுப்பு மண்டலங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே ஆரோக்கியமாக வாழ முடியும். எனவே நீங்கள் அனைவரும் சிறந்தவர்கள் எனக் கூறியது.

**வினாக்கள்:**

1. காற்றை உள்ளிழுக்கவும் வெளியேற்றவும் நுரையீரலுக்கு உதவுவது எது?

   அ) உதரவிதானம் ஆ) சிரை இ) தமனி ஈ) இதயம்

2. கொழுப்பை செரிக்க உதவுவது எது?

   அ) பித்தநீர் ஆ) கணைய நீர் இ) பித்தநீர் மற்றும் கணைய நீர் ஈ) நீர்

3. ஆக்ஸிஜனேற்ற இரத்தத்தை எடுத்துச் செல்வது எது?

   i) நுரையீரல் தமனி மற்றும் சிரைகள் ii) நுரையீரல் சிரை மற்றும் தமனிகள்

   iii) நுரையீரல் சிரை iv) இதயம்

   அ) i மட்டும் ஆ) ii மட்டும் இ) i மற்றும் ii ஈ) iv மட்டும்

4. சிறுநீரகம் இரத்தத்தை சுத்திகரிக்கும்போது அதனை வடிகட்டி

   i) சத்துகளை உறிஞ்சுகிறது ii) கழிவுகளை வெளியேற்றுகிறது

   iii) கழிவுகளை உறிஞ்சுகிறது iv) சத்துகளை வெளியேற்றுகிறது

   அ) i மட்டும் ஆ) ii மட்டும் இ) i மற்றும் ii ஈ) iv மட்டும்

5. எது கட்டளை மையத்தின் பாகம் அல்ல?

   அ) முன்மூளை ஆ) பின்மூளை இ) நடுமூளை ஈ) தண்டுவடம்

www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

**விடைகள்:**

1. அ) உதரவிதானம்
2. இ) பித்தநீர் மற்றும் கணைய நீர்
3. ஆ) ii மட்டும்
4. ஆ) ii மட்டும்
5. ஈ) தண்டுவடம்

www.Padasalai.Net

Scanned with OKEN Scanner